கடவுளின் ஒரே மகன். 'கடவுள் அன்பாகவே இருக்கிறார்" என்று வேதாகமம் சொல்கிறது (1 யோவான் 4:8), மேலும் தேவதேவனாகிய கடவுள் உலகத்தை மிகவும் நேசித்ததால், தான் எப்படிப்பட்டவர் என்பதை மக்களுக்கு காட்டவும், நம்மைத் தன்னிடம் கொண்டு வரவும் தன் மகனாகிய இயேசுவை ஒரு மனிதனின் வடிவத்தில் பூமிக்கு அனுப்பினார். இயேசு உலகத்தின் பாவங்களுக்காக மரித்தும், பிறகு மரித்தோரிலிருந்து உயிர்த்தும் எழுந்தார். நாம் கடவுளிடம் கூட ஒப்புரவாக வேண்டும் என்பதற்கே இதைச் செய்தார்.

இரட்சிப்பின் ஒரே வழி இயேசு கிறிஸ்து. அவர் உங்களை மிகவும் நேசிக்கிறார், அவர் உங்கள் பாவங்களை ஏற்று உங்களுக்காக பாடுபட்டார், எனவே நீங்கள் அவரை உங்கள் வாழ்க்கையில் அழைத்தால், அவருடைய இலவச பரிசான, நித்திய ஜீவனைப் பெறுவீர்கள்.

இந்த ஜெபத்தை உண்மையாக ஜெபிப்பதன் மூலம் நீங்கள் தனிப்பட்ட முறையில் இயேசுவை உங்கள் இதயத்தில் பெறலாம்: "அன்புள்ள இயேசுவே, நான் உம்மை அறிய விரும்புகிறேன். எனக்காக நீங்கள் உங்கள் உயிரைக் கொடுத்ததற்கு நன்றி. நான் செய்த எல்லா தவறுகளுக்கும் என்னை மன்னியுங்கள். என் இதயத்திலும், வாழ்விலும் வந்து, உமது பரிசுத்த ஆவியால் என்னை நிரப்பி, உங்களது இலவச பரிசாகிய நித்திய ஜீவனை எனக்கு வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன். ஆமென்!"

© 2022 Activated
மேலும் அறிய, எங்கள் வலைத்தளத்தைப் பார்வையிடவும்: https://activated.org/en.




கடவுளின் ஒரே மகன். 'கடவுள் அன்பாகவே இருக்கிறார்" என்று வேதாகமம் சொல்கிறது (1 யோவான் 4:8), மேலும் தேவதேவனாகிய கடவுள் உலகத்தை மிகவும் நேசித்ததால், தான் எப்படிப்பட்டவர் என்பதை மக்களுக்கு காட்டவும், நம்மைத் தன்னிடம் கொண்டு வரவும் தன் மகனாகிய இயேசுவை ஒரு மனிதனின் வடிவத்தில் பூமிக்கு அனுப்பினார். இயேசு உலகத்தின் பாவங்களுக்காக மரித்தும், பிறகு மரித்தோரிலிருந்து உயிர்த்தும் எழுந்தார். நாம் கடவுளிடம் கூட ஒப்புரவாக வேண்டும் என்பதற்கே இதைச் செய்தார்.

இரட்சிப்பின் ஒரே வழி இயேசு கிறிஸ்து. அவர் உங்களை மிகவும் நேசிக்கிறார், அவர் உங்கள் பாவங்களை ஏற்று உங்களுக்காக பாடுபட்டார், எனவே நீங்கள் அவரை உங்கள் வாழ்க்கையில் அழைத்தால், அவருடைய இலவச பரிசான, நித்திய ஜீவனைப் பெறுவீர்கள்.

இந்த ஜெபத்தை உண்மையாக ஜெபிப்பதன் மூலம் நீங்கள் தனிப்பட்ட முறையில் இயேசுவை உங்கள் இதயத்தில் பெறலாம்: "அன்புள்ள இயேசுவே, நான் உம்மை அறிய விரும்புகிறேன். எனக்காக நீங்கள் உங்கள் உயிரைக் கொடுத்ததற்கு நன்றி. நான் செய்த எல்லா தவறுகளுக்கும் என்னை மன்னியுங்கள். என் இதயத்திலும், வாழ்விலும் வந்து, உமது பரிசுத்த ஆவியால் என்னை நிரப்பி, உங்களது இலவச பரிசாகிய நித்திய ஜீவனை எனக்கு வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன். ஆமென்!"

© 2022 Activated
மேலும் அறிய, எங்கள் வலைத்தளத்தைப் பார்வையிடவும்: https://activated.org/en.



ஒரு ஆதரவற்ற குழந்தை போல் அவர் இந்த பூமிக்கு வந்தார், ஒரு எளிய இளம் கன்னிப் பெண்ணுக்கு அதிசயமான குழந்தையாகப் பிறந்தார். "அரசர்களின் அரசராக பிறப்பார்",என முன்குறிக்கப்பட்டிருந்தாலும், அவர் மரியாதை மற்றும் புகழுடன் அரண்மனையில் பிறக்கவில்லை. மாறாக, அவர் கால்நடைகள் மத்தியில் ஒரு கொட்டகையின் மண் தரையில் பிறந்தார். அவர் பருத்தி துணியால் சுற்றப்பட்டு விலங்குகளின் தீவனத் தொட்டியில் கிடத்தப்பட்டிருந்தார்.

அவருடைய பிறப்பு மனித நிறுவனங்களிடமிருந்து பெரிய ஆரவாரத்தையோ அங்கீகாரத்தையோ கொண்டு வரவில்லை என்றாலும், அந்த இரவில், அருகே உள்ள மலைப்பகுதியில், நட்சத்திரங்கள் நிறைந்த வானத்தில் ஒரு பிரகாசமான ஒளி பிரகாசித்தது. சில ஏழை மேய்ப்பர்கள் அதைக்கண்டு திகைத்துப் போனார்கள்! மற்றும் தேவ தூதர்கள் அவர்களைத் தங்கள் மகிழ்ச்சி அறிவிப்புடன், "உயர்ந்த கடவுளுக்கு மகிமை! இரட்சகர், கர்த்தராகிய கிறிஸ்து இன்று பூவுலகில் மனிதராக தோன்றினார் ", என குதூகலித்தனர்.

அவரது பூமிக்குரிய தந்தை ஒரு தச்சர், ஒரு தாழ்மையான மரம் வெட்டுபவர், அவருடன் அவர் வாழ்ந்தார் மற்றும் உழைத்தார். இயேசு நம் மனித வழிகளுக்கு இணங்கினார். அவர் நம்மை நன்றாகப் புரிந்து கொண்டு நம்மை நேசிக்கவும், நம் மீது மிகுந்த இரக்கமும் கொண்டார்.

அவர் தனது வேலையைத் தொடங்கிய போதே, எல்லா இடங்களிலும் சென்று எல்லோருக்கும் நன்மைகளை செய்தார் - மக்களுக்கு உதவுதல், குழந்தைகளை நேசித்தல், இதய வலிகளை குணப்படுத்துதல், சோர்வடைந்தவர்களை பலப்படுத்துதல் இன்னும் பல. அவர் தம்முடைய நற்செய்தியை மட்டும் போதிக்கவில்லை, ஆனால் அதை மக்களிடம் வாழ்ந்தும் காண்பித்தார்.

அவர் அவர்களின் ஆன்மீக மற்றும் உடல் தேவைகளை கவனித்து, நோய்வாய்ப்பட்டவர்களை அற்புதமாகக் குணப்படுத்தினார். பசியுள்ளவர்களுக்கு உணவளித்தார். அவருடைய அன்பைப் பகிர்ந்து கொண்டார். அவர் தன்னை எந்தப் புகழும் இல்லாதவராக ஆக்கிக் கொண்டு, சமுதாயத்தில் இருந்து ஒதுக்கப்பட்டவர்களுடனும் தாழ்த்தப்பட்டவர்களுடனும் பழகினார்.

கடவுளின் உண்மை மற்றும் அன்பு பற்றிய அவரது நற்செய்தி பரவியது. அவரை பின்பற்றுபவர்கள் பெருகினர். அப்பொழுது, நிறுவப்பட்ட மதமும் அதன் தலைவர்களும் நாசரேத்தை சேர்ந்த இந்த முன்னர் பின்னர் அறியப்படாத தச்சர் தங்களுக்கு அச்சுறுத்தலாக மாறியிருப்பதை உணர்ந்தனர். அவர்கள் அவரை கைது செய்து பொய்யான குற்றச்சாட்டின் பேரில் விசாரணைக்கு கொண்டு வந்தனர். ரோமாபுரி மேலதிகாரி அவரை நிரபராதி என்று கண்டறிந்தாலும், அவரை தூக்கிலிட அழுத்தம் கொடுக்கப்பட்டது.

அவரது உடல் ஒரு கல்லறையில் வைக்கப்பட்டது. மூன்று நாட்களுக்குப் பிறகு, அவர் உயிர்த்தெழுந்தார்! மரணம், நரகம் மற்றும் கல்லறையை வென்றவர், இயேசுவாகிய அவர்! 2000 ஆண்டுகளுக்கு முன் வந்த இயேசு கிறிஸ்து அவருக்கு முன் அல்லது அதற்குப் பிறகு வந்த வேறு எந்தத் தலைவர், குழு, அரசாங்கம் அல்லது பேரரசை விட வரலாற்றையும், நாகரிகத்தின் போக்கையும், மனிதகுலத்தின் நிலையையும் சிறப்பாக மாற்றியமைத்துள்ளார். அவர் நம்பிக்கையின்மை மற்றும் விரக்தியிலிருந்து பலகோடி மக்களை காப்பாற்றினார், அவருடைய பெயரைக் கூப்பிடுகிற அனைவருக்கும் கடவுளின் அன்பையும் நித்திய ஜீவனையும் கொடுத்தார்.

இந்த மனிதன், இயேசு கிறிஸ்து, ஒரு தத்துவஞானி, ஆசிரியர், குரு அல்லது தீர்க்கதரிசி மட்டுமல்ல. அவர்

ஒரு ஆதரவற்ற குழந்தை போல் அவர் இந்த பூமிக்கு வந்தார், ஒரு எளிய இளம் கன்னிப் பெண்ணுக்கு அதிசயமான குழந்தையாகப் பிறந்தார். "அரசர்களின் அரசராக பிறப்பார்",என முன்குறிக்கப்பட்டிருந்தாலும், அவர் மரியாதை மற்றும் புகழுடன் அரண்மனையில் பிறக்கவில்லை. மாறாக, அவர் கால்நடைகள் மத்தியில் ஒரு கொட்டகையின் மண் தரையில் பிறந்தார். அவர் பருத்தி துணியால் சுற்றப்பட்டு விலங்குகளின் தீவனத் தொட்டியில் கிடத்தப்பட்டிருந்தார்.

அவருடைய பிறப்பு மனித நிறுவனங்களிடமிருந்து பெரிய ஆரவாரத்தையோ அங்கீகாரத்தையோ கொண்டு வரவில்லை என்றாலும், அந்த இரவில், அருகே உள்ள மலைப்பகுதியில், நட்சத்திரங்கள் நிறைந்த வானத்தில் ஒரு பிரகாசமான ஒளி பிரகாசித்தது. சில ஏழை மேய்ப்பர்கள் அதைக்கண்டு திகைத்துப் போனார்கள்! மற்றும் தேவ தூதர்கள் அவர்களைத் தங்கள் மகிழ்ச்சி அறிவிப்புடன், "உயர்ந்த கடவுளுக்கு மகிமை! இரட்சகர், கர்த்தராகிய கிறிஸ்து இன்று பூவுலகில் மனிதராக தோன்றினார் ", என குதூகலித்தனர்.

அவரது பூமிக்குரிய தந்தை ஒரு தச்சர், ஒரு தாழ்மையான மரம் வெட்டுபவர், அவருடன் அவர் வாழ்ந்தார் மற்றும் உழைத்தார். இயேசு நம் மனித வழிகளுக்கு இணங்கினார். அவர் நம்மை நன்றாகப் புரிந்து கொண்டு நம்மை நேசிக்கவும், நம் மீது மிகுந்த இரக்கமும் கொண்டார்.

அவர் தனது வேலையைத் தொடங்கிய போதே, எல்லா இடங்களிலும் சென்று எல்லோருக்கும் நன்மைகளை செய்தார் - மக்களுக்கு உதவுதல், குழந்தைகளை நேசித்தல், இதய வலிகளை குணப்படுத்துதல், சோர்வடைந்தவர்களை பலப்படுத்துதல் இன்னும் பல. அவர் தம்முடைய நற்செய்தியை மட்டும் போதிக்கவில்லை, ஆனால் அதை மக்களிடம் வாழ்ந்தும் காண்பித்தார்.

அவர் அவர்களின் ஆன்மீக மற்றும் உடல் தேவைகளை கவனித்து, நோய்வாய்ப்பட்டவர்களை அற்புதமாகக் குணப்படுத்தினார். பசியுள்ளவர்களுக்கு உணவளித்தார். அவருடைய அன்பைப் பகிர்ந்து கொண்டார். அவர் தன்னை எந்தப் புகழும் இல்லாதவராக ஆக்கிக் கொண்டு, சமுதாயத்தில் இருந்து ஒதுக்கப்பட்டவர்களுடனும் தாழ்த்தப்பட்டவர்களுடனும் பழகினார்.

கடவுளின் உண்மை மற்றும் அன்பு பற்றிய அவரது நற்செய்தி பரவியது. அவரை பின்பற்றுபவர்கள் பெருகினர். அப்பொழுது, நிறுவப்பட்ட மதமும் அதன் தலைவர்களும் நாசரேத்தை சேர்ந்த இந்த முன்னர் பின்னர் அறியப்படாத தச்சர் தங்களுக்கு அச்சுறுத்தலாக மாறியிருப்பதை உணர்ந்தனர். அவர்கள் அவரை கைது செய்து பொய்யான குற்றச்சாட்டின் பேரில் விசாரணைக்கு கொண்டு வந்தனர். ரோமாபுரி மேலதிகாரி அவரை நிரபராதி என்று கண்டறிந்தாலும், அவரை தூக்கிலிட அழுத்தம் கொடுக்கப்பட்டது.

அவரது உடல் ஒரு கல்லறையில் வைக்கப்பட்டது. மூன்று நாட்களுக்குப் பிறகு, அவர் உயிர்த்தெழுந்தார்! மரணம், நரகம் மற்றும் கல்லறையை வென்றவர், இயேசுவாகிய அவர்! 2000 ஆண்டுகளுக்கு முன் வந்த இயேசு கிறிஸ்து அவருக்கு முன் அல்லது அதற்குப் பிறகு வந்த வேறு எந்தத் தலைவர், குழு, அரசாங்கம் அல்லது பேரரசை விட வரலாற்றையும், நாகரிகத்தின் போக்கையும், மனிதகுலத்தின் நிலையையும் சிறப்பாக மாற்றியமைத்துள்ளார். அவர் நம்பிக்கையின்மை மற்றும் விரக்தியிலிருந்து பலகோடி மக்களை காப்பாற்றினார், அவருடைய பெயரைக் கூப்பிடுகிற அனைவருக்கும் கடவுளின் அன்பையும் நித்திய ஜீவனையும் கொடுத்தார்.

இந்த மனிதன், இயேசு கிறிஸ்து, ஒரு தத்துவஞானி, ஆசிரியர், குரு அல்லது தீர்க்கதரிசி மட்டுமல்ல. அவர்